பிரதான தகவல் கூற்று மற்றும் சேவை விபரக் கையேடு

கணக்கின் பெயர்	Mudaraba வெளிநாட்டு நாணயக் கணக்கு
விபரம்	தனித்துவமான வெளிநாட்டு நாணயங்களில் சேமித்து, உங்கள் சேமிப்பிலிருந்து கவர்ச்சிகரமான வருமானத்தை அனுபவிக்கவும். இந்த கணக்குகள் இலாபத்தை பகிரும் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும்.
அனுமதிக்கப்படும் நாணய வகைகள்	வெளிநாட்டு நாணயத்திலான (FCY) சேமிப்பு கணக்குகள்: USD, GBP FCY தவணை வைப்புக் கணக்குகள: USD, GBP
முக்கிய விடயங்கள்	வெளிநாட்டு நாணயத்திலான சேமிப்பு கணக்குகள் ஆரம்ப வைப்பு: USD 100/- அல்லது அதற்கு சமனான தொகை மீளப் பெறுவதற்கான எண்ணிக்கையில் எவ்விதமான வரையறையும் இல்லை FCY தவணை வைப்புக் கணக்குகள்; குறைந்தபட்ச வைப்பு : USD 10,000/- அல்லது அதற்கு சமனான தொகை கிடைக்கப்பெறும் தவணைகள் : 01 மாதம், 3 மாதங்கள், 6 மாதங்கள், 1 வருடம் (தவணை வைப்புகள்)
இலாப வீதம்	சமீபத்திய இலாப விகிதங்களுக்கு, https://www.mcb.com.lk/islamic-banking/ ஐப் பார்வையிடவும்
இலாபம் வழங்கப்படும் கால இடைவெளி	சேமிப்பு கணக்குகள்: மாதாந்தம் தவணை வைப்புகள் 03 மற்றும் 06 மாதங்கள்: முதிர்ச்சியில் தவணை வைப்புகள் 01 வருடம் : மாதாந்தம் மற்றும் முதிர்ச்சியில் எனும் தேர்வுகள் உள்ளன.
கணக்கு வகைகள்	தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு (PFCA) வணிக வெளிநாட்டு நாணய கணக்கு (BFCA) உள்முக முதலீட்டுக் கணக்கு (IIA) வெளிமுக முதலீட்டுக் கணக்கு (OIA) இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு (DFA)
நன்மைகள்/ பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள்	LKR கணக்குகளைத் திறக்கும் திறன் மற்றும்/ அல்லது பிற நிதி தயாரிப்புகள்/ பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை அனுபவிப்பதற்கான வசதி (சட்டப்பூர்வ வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டது)
கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்	வங்கிக் கணக்குகள் தொடர்பான தற்போதைய அறவீடுகள் மற்றும் கட்டணங்கள் கணக்குகள் மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகள் தொடர்பான விபரங்களுக்கு www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் (வங்கி கட்டணங்களின் அட்டவணை)
தகைகமைகள்	**தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு (PFCA)** இலங்கையில் அல்லது வெளியில் வசிக்கும் இலங்கைப் பிரஜை செல்லுபடியாகும் இலங்கை வதிவிட விசா வைத்திருக்கும் வெளிநாட்டவர் **வணிக வெளிநாட்டு நாணய கணக்கு (BFCA)** இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டவர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தனியுரிமை அல்லது கூட்டாண்மை உரிமையாளர் அல்லது பெரும்பான்மையான பங்காளிகள் இலங்கையில் இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டுள்ளனர் 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம். இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம். **உள்முக முதலீட்டுக் கணக்கு (IIA)** இலங்கை பிரஜை அல்லாத இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டவர் அல்லது வெளிநாட்டில் வதிவிடத்தைக் கொண்ட நபர் இலங்கை பிரஜை, இலங்கைக்கு வெளியில் வதிவிடத்தைக் கொண்டவர். நிறுவனம் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டது. ஏனைய கணக்கு வகைகளுக்கு: **வெளிப்புற முதலீட்டுக் கணக்கு (OIA)** 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டதன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கூட்டாண்மைகள் இலங்கையில் வதிவிடத்தைக் கொண்ட தனிநபர்கள் **இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு (DFA)** வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவிட விசாவைப் பெறுதல் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட தூதரகப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ** அவ்வப்போது நாணயப் பரிமாற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம்/ மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் வேறு நபர் அல்லது வகை.* *அனுமதிக்கப்பட்ட அனைத்து வரவுகளும்/ பற்றுகளும் 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டத்திற்கு உட்பட்டவை.*
அவசியமான ஆவணங்கள்	சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கைத் திறப்பதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தொடர்புடைய படிவங்கள்
தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு	தகுதியுள்ள இலங்கை பிரஜைகளுக்கு செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரம் வெளிநாட்டினருக்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் விசா
நிறுவன வாடிக்கையாளர்களுக்கு	முகவரிச் சான்று (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்)
	விபரப்பாப் பதிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/ படிவங்கள்
	பணிப்பாளர்கள்/ பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள்
	வங்கிக்கு, தனிநபர் அல்லது நிறுவனம் அடையாளத்தை நிறுவுவதற்கு மற்றும் நாணயப் பரிமாற்றல் கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோல்களை கடைபிடிப்பதை தெளிவுபடுத்துவதற்கு வேறு ஏதேனும் ஆவணம் தேவைப்படலாம்.
கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை	கணக்கைத் திறக்க மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகளைப் பெறுவதற்கு தயவுசெய்து அருகிலுள்ள எம்சிபி வங்கிக் கிளைக்குச் சென்று முழுமையான ஆவணங்களை ஒப்படைக்கவும்
ஏனைய தொழிற்பாட்டு தகவல்கள்/ நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	பரிவர்த்தனை கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பது மற்றும் பராமரிப்பது தொடர்பான விரிவான தகவல்களுக்கு வங்கியைத் தொடர்பு கொள்ளவும்.
	முதிர்ச்சியடையாத மீளெடுப்புகளுக்கு, வங்கி அதன் தற்துணியின்படி இலாபத்தை குறைப்பதற்கு அல்லது சாதாரண சேமிப்புக் கணக்குக்குப் பொருந்தக் கூடிய இலாப பங்கீட்டு வீதமாக மாற்றுவதற்கு உரிமையைக் கொண்டுள்ளது.
	திருப்திகரமான அளவில் பராமரிக்கப்படாத அல்லது சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு கணக்கையும் நிறுத்திவைத்திருக்க/ மூட வங்கிக்கு உரிமை உண்டு.
	FCY சேமிப்புக் கணக்குகள் வாடிக்கையாளர் பரிமாற்றங்கள் இல்லாமல் 2 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படாமல் இருக்கும் பரிவர்த்தனைகள் செயலற்றதாக வகைப்படுத்தப்படும். (காலம் அவ்வப்போது மாறுபடலாம்)
	10 ஆண்டுகள் செயலற்ற நிலையில் இருக்கும் வெளிநாட்டு நாணயத்திலான சேமிப்புக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்திலான தவணை வைப்புகள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டுதல்களின்படி கையாளப்படும்.
	இலங்கை மத்திய வங்கியின் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்க வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. இணக்கத்திற்காக/ தவறுகைகளை மீளத் திருப்பலுக்காக/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்காக ஏதேனும் தவறான/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எழுத்துப்பூர்வமாக கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
	வங்கியின் உள் கொள்கைகள்/ செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாறக்கூடும், மேலும் அவை வங்கியின் இணையதளம்/கிளை அறிவித்தல் பலகைகளில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஊடகம் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும்.
மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள்	எம்சிபி வங்கிக் கிளைகளுக்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள்/ விஜயம் செய்யுங்கள்| இணையத்தளம்: www.mcb.com.lk | ஹொட்லைன்: 011 5222 200 | மின்னஞ்சல் : info@mcb.com.lk வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களுக்கான தீணைக்கள இணையத்தளம் : https://dfe.lk/
முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை	எந்த எம்சிபி வங்கி கிளை மூலமாகவும் புகார்களை அனுப்பலாம் (பிரத்தியோக புகார் பெட்டி உள்ளது)
	பிரத்தியோக நேரடி தொடர்பு மையம் : தீணைக்களத் தலைவர் - இணக்கம், எம்சிபி வங்கி லிமிட்., 08, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 01. தொலைபேசி : 011 5222 230 | மின்னஞ்சல்: complaints@mcb.com.lk
	தீர்மானம் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டால்/ 04 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் புகாரை மின்வருமாறு விரைவுபடுத்தலாம்: நிதி ஒம்புட்ஸ்மேன், இல.01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு - 05 தொலைபேசி: 011 2595 624 |மின்னஞ்சல் : fosril@sltnet.lk |இணையத்தளம்: www.financialombudsman.lk

எம்சிபி வங்கி லிமிட்ட் என்பது இலங்கை மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

கடன் மதிப்பீடு: "AA- (lka)" | Outlook Stable (Fitch Ratings)